**2012 ஜனவரி 18ம் திகதியன்று அறிவியல் நகரில் (கிளிநொச்சி) செப்பனிடப்பட்ட பாடசாலைகள் மற்றும் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றின் கையளிப்பின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களே,

வெளியுறவு அமைச்சர் கௌரவ ஜீ.எல். பீரிஸ் அவர்களே,

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களே,

கௌரவ வட மாகாண ஆளுனர் அவர்களே,

மேன்மையுள்ள விருந்தினர்களே,

சீமான்களே சீமாட்டிகளே,

வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லத்தீவு, மற்றும் வவுனியா ஆகிய மூன்று பிரதேசங்களிலும் சென்ற முப்பதாண்டு யுத்தத்தின் காரணமாகச் சேதமாக்கப் பட்ட 79 பாடசாலைகளைப் புனரமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளில் முதலாவது பாடசாலையைக் கையளிக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட இடம் பெயர்ந்த மக்களின் பிள்ளைகளின் கல்வி வசதிகளைப் புனரமைப்பதற்கும் இந்தப் பிரதேசத்தின் அடிப்படைக் கல்விக் கட்டமைப்புக்களைப் புனருத்தாரணம் செய்வதற்குமான நோக்கத்துடன் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் பயனாகக் குடும்பத்தவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கும், பிள்ளைகள் நல்லதொரு சுற்றாடலில் கல்வி கற்பதற்கும் வழி சமைக்கப்படும் என்பதனைக் கவனிக்கும் போது நான் பேருவகை அடைகிறேன்.

இங்கு வருவதற்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்ற வைபவமொன்றில் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை மேம்படுவதற்கும் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை அனுப்புவதைத் தவிர்க்கும் நோக்கத்துடனான அத்தியாவசிய வைத்திய உபகரணங்களைக் கையளித்தேன். அதே போன்ற உபகரணங்கள் முல்லைத்தீவு பிரதேச பொது வைத்தியசாலைக்கும் வழங்கப்பட்டன. சுகாதாரப் பராமரிப்பு சேவையில் போர் முடிவுக்கு வந்தவுடனான அவசர வைத்திய சேவை நிவாரணம் மற்றும்

செயற்கை அவயவங்களைப் பொருத்தும் முகாம்களை அமைத்தல் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் வைத்திய உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. வவுனியா வைத்தியசாலையில் 200 படுக்கைகள் கொண்ட வாட் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவொன்றிற்கும் இந்திய அரசாங்கம் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. வடமாகாணத்திலுள்ள புனருத்தாரணம், மீள் குடியேற்றம், மற்றும் இடம் பெயர்ந்தோருக்கான நலனோம்புதல் போன்றவற்றிற்கான செயற்றிட்டங்களுக்கும் இந்தியா உதவிகளை வழங்குகின்றது.

2010 நவம்பர் மாதத்தில் என்னுடைய விஜயத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட 1,000 வீடுகளை அமைப்பதற்கான முன்னோடித்திட்டத்திற்கமைய அமைக்கப்பட்ட வீடுகளையே நீங்கள் இந்தப் பாடசாலை வளவினூடாகப்பார்க்கின்றீர்கள். இங்கு அறிவியல் நகரிலுள்ள பயனாளிகளுக்கும் இன்று இன்னும் சற்று நேரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் அரியாலையிலுள்ள பயனாளிகளுக்கும் இந்த வீடுகளைக் கையளிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த முன்னோடித்திட்டத்தின் மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள், 49,000 வீடுகளுக்கான எமது செயற்றிட்டத்தின் அடுத்த கட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பேருதவியாக அமையும். அதற்கான தடங்கலற்ற செயலாற்றுகையை உறுதிப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை அமைச்சர் பீரிஸ் அவர்களும் நானும் எமது இருநாட்டு அரசாங்கங்களின் சார்பில் நேற்றுக் கையெழுத்திட்டோம்.

எங்கள் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் எமக்குத் தேவையான உதவிகளைப் புரிந்த இலங்கை அரசாங்கத்தின் பலதரப்பட்ட பிரதிநிதிகளுக்கும் மற்றைய உள்ளூர் பங்குதாரர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுடைய உதவிகளைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்தோருக்கான புனர் வாழ்வு மீள் குடியேற்றம் அவர்களுடைய நலன்கள் ஆகியவற்றைப் பேணுவதில் இந்தியா மிகவும் உறுதியாகவுள்ளது. இன்னும் அதிகமாகச் செய்வதற்கும் ஆயத்தமாகவுள்ளது.

நன்றி.